நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்றால், 1974-ம் ஆண்டுக்குள்ளாக இன்னும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள், சேலத்தில் ஒன்று திருச்சியில் ஒன்று ஆக இரண்டு கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன என்று நான் சொன்னேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது என்னவென்று எனக்குத் தெரியாது. பத்திரிகைகளில்தான் பார்த்தேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பொழுதுதான் இரண்டாவது வருடம் நடக்கிறது. சேலத்திலும், திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கான திட்டம் விடப்பட்டது என்று அர்த்தம் அல்ல. நான்காவது திட்டம் முடிவதற்குள்ளாக ஆரம்பிக்க வழிவகைகள் இருக்கின்றன. செயற்குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் பத்திரிகைக்காரர்கள் எல்லாம் செய்தியை தங்களுக்கு விருப்பமான வகையில், "மதியழகனுக்கு நெடுஞ்செழியன் மறுப்பு" என்றும், "நெடுஞ்செழியனுக்கு மதியழகன் மறுப்பு" என்ற வகையிலும் போட்டுக்கொள்கிறார்கள். இந்த மாதிரி செய்திகளைப் போட்டு, சேலத்து மக்களையும், திருச்சி மக்களையும் என்மீது கோபத்தை உண்டுபண்ணும்படி செய்துவிட முடியாது. நிதி நிலைகள், ஆதாரங்கள் இவற்றை கொண்டு இந்த நான்காவது திட்டத்திலே திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரி அமைய வழிவகைகள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது.

(3) நடைமுறைக் கேள்விகள்.

(அ) உறுப்பினர்கள் அதிகாரிகள் காலரியில் உள்ள அதிகாரிகளிடமிருந்து செய்திகளைப் பெறுதல் குறித்து.

(திரு. சி. வி. எம் அண்ணாமலை அவர்கள் அதிகாரிகள் காலரியில் பேசிக்கொண்டு இருந்தார்.)

THIRU K. VINAYAKAM : On a point of Order, Sir. There was a ruling yesterday in the Lok Sabha also that Members from either the Treasury Benches or from Opposition Benches should not get themselves tutored by the officials in the officials gallery The Hon. Speaker of the Lok Sabha has ruled that such a thing is inconsistent with the rules obtaining in that House.

Even yesterday, here some Members were getting themselves tutored by the officials near he officials gallery and getting information. Of course they can do so stealthily. I raised the point yesterday.

THE HON. THIRU K. A. MATHIALALAGAN : you can agree with Thiru Vinayakam, Sir.

THIRU K. VINAYAKAM : The Hon. Minister comes to tre aid of the Hon. Speaker. It is not necessary. The Hon. Speaker is well-versed in rules.

I am coming to the point. When I raised the point yesterday, one of the panel of Chairmen who was presiding, gave a wrong ruling. He said there was no point of Order. What is your opinion, Sir ? Do you agree with my point of Order that Members should not cross, that they should not almost crawl to the official benches and get themselves tutored ? Please give your ruling, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களைத் தவிர்த்து, இந்த மன்றத்திலே இருக்கின்ற அங்கத்தினர்கள், அபிஷியல் காலரியில் உட்கார்ந்திருக்கும் அதிகாரிகளிடம் இந்த பேரவைக் குள்ளே நின்று, செய்திகளைப் பெறுவது விரும்பத்தக்கதல்ல. அப்படிச் செய்யாமல் இருப்பதை எல்லா உறுப்பினர்களும் மேற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் கூறினார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்கும், என்னுடைய கருத்துக்கும் வேறு பாடும் இல்லை; முரண்பாடும் இல்லை. திருச்சிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும், சேலத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று அங்குள்ள உள்ளாட்சித் துறையினர், சட்ட மன்ற உறுப் பினர்கள் போன்றவர்களிடமிருந்து கோரிக்கை வந்தது உண்டு. அதற்கான செயற்குறிப்புக்களும் தயாரிக்கப்பட்டது உண்டு. இரண்டு கல்லூரிகளும் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அங் குள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிகள் நான்கா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்தது உண்டு. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் மொத்தம் பத்து கல்லூரிகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிற தென்று இந்திய சுகாதார அமைச்சர் திரு. கே. கே. ஷா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு கல்லூரியாவது நமக்குக் கிடைக்காதா. ஒரு கல்லூரியாவது பெற முடியுமா என்பதைக் குறித்து அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

இந்த மருத்துவக் கல்லூரி எப்போது வரும் என்று சொல்ல முடியாது. இப்போதுள்ள சூழ்நிலையை வைத்துக்கொண்டு, இனி மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி இல்லை என்று சொன்னேன். மருத்துவக் கல்லூரியில் படித்தவர்களுக்கு வேலையில்லாத் திண் டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. மதுரையைச் சேர்ந்த ஹவுஸ் சர்ஜன்கள் எல்லாம் சேர்ந்து அரசுக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதில், புதிய மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தக் கூடாது என்றும், இப்போதிருக்கிற மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்றும் விண்ணப்பம் கொடுத் திருக்கிறார்கள். இந்த விண்ணப்பமும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.